தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகளுக்கு உதவும் புதிய கண்டுபிடிப்புகள் தேவை: அப்துல் கலாம் ஆலோசகர்

**சென்னை:**இந்தியாவில் விவசாயிகளுக்கு உதவும் வகையிலான புதிய கண்டுப்பிடிப்புகள் தேவை என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் அறிவியல் ஆலோசகர் பொன்ராஜ் வெள்ளைச்சாமி தெரிவித்தார்.

சென்னை ஐ.ஐ.டி. வளாகத்தில் புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பல்வேறு அறிவியல் தொழில்நுட்ப நிபுணர்கள் கலந்து கொண்டு கருத்துகளை தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் பொன்ராஜ் வெள்ளைச்சாமி பேசியது: வரும் 2020-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு 400 மில்லியன் டன்கள் உணவு தானியங்கள் தேவை.

ஆனால் இப்போது 265 மில்லியன் டன்கள் மட்டுமே உற்பத்தியாகின்றன. விவசாயிகளுக்கு உதவும் வகையிலான புதிய கண்டுபிடிப்புகளை கண்டறிய வேண்டும்.

குறைந்த நிலப்பரப்பில், குறைவான தொழிலாளர்களுடன் அதிக உற்பத்தி கிடைக்கும் வகையில் கண்டுப்பிடிப்புகள் தேவை.

மேலும் எண்ணெய் மற்றும் எரிவாயு சிக்கனம், கழிவுநீர் கால்வாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்குவது போன்றவற்றிலும் புதிய கண்டுபிடிப்புகள் தேவை. இப்போது இருக்கும் கண்டுபிடிப்புகளை பயன்படுத்துவதில் சிக்கல் உள்ளது. உதாரணமாக, தங்க நாற்கர சாலை திட்டத்தில் ஏராளமான மரங்கள் வெட்டப்பட்டன.

மரங்களை பெயர்த்து வேறு இடங்களில் நடும் தொழில்நுட்பம் இருந்தும், அதனைப் பயன்படுத்த முடியவில்லை. இந்த இடைவெளியை களையவேண்டும.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயம் 17 சதவீத பங்களிப்பு தருகிறது. விவசாயம் தான் முக்கியம். அதற்கான தொழில்நுட்பங்களை கண்டறியவேண்டும் என்றார் பொன்ராஜ் வெள்ளைச்சாமி.

## சென்னையில் காய்கறிகள் விலை அதிகரிப்பு

**சென்னை:**சென்னை கோயம்பேடு மார்க்கெட் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் உள்ள சந்தைகளில் காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

தக்காளி, வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகள் கிலோவுக்கு ரூ. 10 வரை விலை உயர்ந்துள்ளது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு பல்வேறு இடங்களில் இருந்து காய்கறிகள் தினமும் லாரிகளில் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

பின்பு கோயம்பேடு மார்க்கெட்டில் இருந்து சென்னையின் பல்வேறு பகுதிகளில் உள்ள சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் காய்கறி சந்தைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

இந்நிலையில் கோயம்பேடு மார்க்கெட்டில் ஞாயிற்றுக்கிழமை வெண்டைக்காய், பீன்ஸ், தக்காளி உள்ளிட்ட பெரும்பாலான காய்கறிகளின் விலை கிலோவுக்கு ரூ.3 முதல் ரூ.10 வரை அதிகரித்துள்ளது.

வெயில் காரணமாக காய்கறி சாகுபடி செய்யும் பகுதிகளில் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடந்த சில வாரங்களாக பெரும்பாலான காய்கறிகளின் வரத்து வழக்கத்தைக் காட்டிலும் குறைந்துள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் நாசிக், அகோலா உள்ளிட்ட பகுதிகளில் ஐஸ்கட்டி மழை அடிக்கடி பெய்து வருவதால் வெங்காய விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

வரும் நாள்களின் இதன் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என  கோயம்பேடு மார்க்கெட் வெங்காய வியாபாரிகள் சங்கத்தின் ஆலோசகர் செளந்தரராஜன் தெரிவித்தார்.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் ஞாயிற்றுக்கிழமை விலை விவரம் (பழைய விலை அடைப்புக்குறிக்குள்):

உருளைக் கிழங்கு - ரூ.25 (ரூ.20)

கத்தரிக்காய் - ரூ.15 (ரூ.13)

முட்டைக்கோஸ் - ரூ.15 (ரூ.20)

சின்ன வெங்காயம் - ரூ.25 (ரூ.25)

பெரிய வெங்காயம் - ரூ.30 (ரூ.20)

கேரட் - ரூ.35 (ரூ.30)

பச்சைப் பட்டாணி - ரூ.130 (ரூ.180)

முருங்கைக்காய் - ரூ.60 (ரூ.40)

தக்காளி - ரூ.35 (ரூ.25)

சேனைக் கிழங்கு - ரூ.22 (ரூ.15)

வெண்டைக்காய் - ரூ.30 (ரூ.25)

அவரைக்காய் - ரூ.50 (ரூ.60)

கொத்தமல்லி - ரூ.60 (ரூ.130)

## விவேகானந்தர் நினைவு தினம்: மரக்கன்று நடும் பணி

**பழனி:** பழனி விவேகானந்தா சேவா டிரஸ்ட் சார்பில் சுவாமி விவேகானந்தர் நினைவு தினத்தை முன்னிட்டு பழனி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஐநூறு மரக்கன்றுகள் நட திட்டமிட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக வெள்ளிக்கிழமை பாப்பம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் நூறு மரக்கன்றுகள் நடும் பணி தொடங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமையாசிரியர் கலைச்செல்வி தலைமை வகித்தார்.

பாப்பம்பட்டி ஊராட்சித் தலைவர் கர்ணன் மரக்கன்றை நட்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மாணவர்களும் சேவா டிரஸ்டின் உறுப்பினர்களும் நூறு மரக்கன்றுகளை நட்டு முடித்தனர்.

வேம்பு, புங்கன், இலுப்பை, புளியன், வாகை, போன்ற பல்வேறு வகை மரக்கன்றுகள் வளாகத்தில் நடப்பட்டன. விழாவிற்கான ஏற்பாடுகளை ஆசிரியர் கதிர்வேல் செய்திருந்தார்.

நடப்பட்ட மரக்கன்றுகளை தொடர்ந்து பராமரித்து வளர்த்திடவும், பத்துக்கும் மேற்பட்ட பள்ளிகளில் மரக்கன்றுகள் நடுவதற்கும் திட்டமிட்டுள்ளதாக விவேகானந்தா சேவா டிரஸ்ட் அமைப்பினர் தெரிவித்தனர்.

## கண்மாய் நீரை பயன்படுத்துவோர் சங்கத் தேர்தல்

**விருதுநகர்:**விருதுநகர் மாவட்டத்தில் நீர்வள நிலவள திட்டத்தின் சார்பில் காயல்குடியாறு உபவடி நிலத்தில் நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களுக்கான தலைவர் மற்றும் ஆட்சி மண்டல தொகுதி உறுப்பினர்களுக்கான தேர்தல் ஜூலை 20ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் டி. என். ஹரிஹரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: இம்மாவட்டத்தில் காயல்குடியாறு உபவடி நிலத்தில் உள்ள 13 நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களுக்கான தேர்தல் ஜூலை 20ஆம் தேதி நடைபெறவுள்ளது. தேர்தல் நடத்தும் அலுவலராக விருதுநகர் உதவி ஆணையர் (கலால்) கூ.பழனியாண்டி நியமிக்கப்பட்டுள்ளார். உதவித் தேர்தல் அலுவலராக அந்தந்த பாசன அமைப்புகளுக்கு தொடர்புடைய வருவாய் வட்டாட்சியர்கள் பின்வருமாறு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலப்பாட்டம் கரிசல்குளம், செட்டிக்குளம், கொத்தங்குளம் மற்றும் சித்தர்குளம் ஆகிய நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களின் தேர்தல் நடத்தும் உதவி அலுவலராக ராஜபாளையம் வட்டாட்சியர் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல், திருமாலை வணங்கினான், இடையன்குளம், படிக்காசுவைத்தான்பட்டி, பிள்ளையார்குளம், வேப்பங்குளம், வடகரை சிறுகுளம் ஆகிய கண்மாய் நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களின் தேர்தல் நடத்தும் அலுவலராக ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியரும், நதிக்குடி சிறுகுளம், நதிக்குடி செவல்குளம், கோபாலசமுத்திரம் ஆகிய கண்மாய் நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களின் தேர்தல் நடத்தும் அலுவலராக சிவகாசி வட்டாட்சியரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இத்தேர்தலில் போட்டியிட விருப்பம் உள்ள மேற்படி பாசன அமைப்புகளின் நீரினை பயன்படுத்தும் வாக்காளர்கள், தொடர்புடைய வட்டாட்சியர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வருகிற 9-ம் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரையில்

வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம். இதையடுத்து வருகிற 10ம் தேதி அன்று இறுதி செய்யப்பட்டு, போட்டி நிலவுகிற சங்கங்களுக்கு வரும் 20ம் தேதி காலை 7 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையில் வாக்கு பதிவு நடத்தப்படும்.

அதேபோல், அன்றைய நாளிலேயே வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகளும் அறிவிக்கப்படும்.

எனவே இத்தேர்தலில் போட்டியிட விரும்புவோர், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள நில உடைமையாளர்கள் வருகிற 9ஆம் தேதி தொடர்புடைய உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனுத்தாக்கல் செய்து பயனடையலாம் என ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

## ஊருணியில் 300 மரக்கன்றுகள் நடும் விழா

**பரமக்குடி:** பரமக்குடி அருகே உள்ள பார்த்திபனூர் சிவன்கோயில் சந்தைக்குளம் ஊருணியில் ஊராட்சி மன்றம் சார்பில் 300 மரக்கன்றுகள் நடும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவுக்கு பரமக்குடி கோட்டாட்சியர் வசந்தி தலைமை வகித்தார். அதிமுக மாவட்டச் செயலர் எம்.ஏ . முனியசாமி, மாவட்ட கவுன்சிலர்கள் கே.சி. ஆணிமுத்து, எம்.கே. ரஜினிகாந்த், ஒன்றிய க வுன்சிலர் கே. முத்தையா, தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் எம். நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்றத் தலைவர் ரேணுகா தங்கவேல் வரவேற்றார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் எஸ். சுந்தரராஜ் சிவன்கோயில் சந்தைக்குளம் ஊருணியில் மர க்கன்றுகளை நட்டு விழாவை துவக்கி வைத்துப் பேசியது: பார்த்திபனூரில் உள்ள சிவன்கோயில் 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோயிலாகும். சேதமடைந்து பராமரிப்பின்றி கிடந்த இத்திருத்தலத்துக்கு தமிழக முதல்வர் ரூ.31 லட்சம் நிதி ஒதுக்கி புணரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இக்கோயிலை தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் தங்கிச் செல்லும் வகையில் ரூ.54 லட்சத்தில் சமுதாயக் கூடம் கட்டுப்பட்டு வருகிறது. இக்கோயிலுக்குச் சொந்தமான சந்தைக்குளம் ஊருணியை ரூ.9.76 லட்சத்தில் ஆழப்படுத்துதல் மற்றும் அங்கு முள்வேலி அமைக்கும் பணியும், ரூ.2 லட்சத்தில் சாலைகள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தமிழக முதல்வரின் தொலை நோக்குத் திட்டமான மழைநீர் சேகரிப்புக்கு தேவையான மழை பெய்வதற்கு மரங்கள் அவசியம் என்ற உயர்ந்து எண்ணத்தில் அவரது பிறந்த நாளில் தமிழகம் முழுவதும் 1.99 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டன. அதற்கு முன்மாதிரியாக இந்த ஊராட்சி மன்றம் இங்கு தற்போது 300 மரக்கன்றுகளை ஊருணியைச் சுற்றி நடுவதற்கு திட்டமிட்டு பணி நடைபெற்று வருகிறது.

பார்த்திபனூர் பகுதியில் ரூ.10 லட்சத்தில் உப்பு நீரை நல்ல தண்ணீராக மாற்றும் திட்டமும், இங்குள்ள பெருமாள் கோயிலை மேம்படுத்த ரூ.20 லட்சம் நிதியும் வழங்கப்பட உள்ளது. இப்பகுதியில் சட்டப் பேரவை உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.7 லட்சத்தில் சிமெண்ட் சாலையும், ரூ.5 லட்சத்தில் வடிகால் அமைக்கும் பணியும் செய்து தரப்பட்டுள்ளது. சூடியூரில் ரூ.25 லட்சத்தில் ஆழ்துளை கிணறு அமைத்து பாரத்திபனூர் பகுதி மக்களுக்கு குடிநீரும், அதே பகுதியில் ரூ.36 லட்சத்தில் திறந்த வெளிக்கிணறும் அமைத்து குடிநீர் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் நீர் ஆதாரத்தை பெருக்குவதற்காக ரூ.25 கோடியில் கசிவுநீர் குட்டைகளும், ஊருணிகளும் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. திருவாரூர் மாவட்டத்தில் ரூ.10 கோடியில் உபரியாகச் செல்லும் மழைநீரை நிலத்தடியில் கொண்டு செல்லும் வகையில் ஆழ்குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் வறட்சிக் காலங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறைவதால், கடல்நீர் மட்டம் உள்ளே புகுவதை தடுக்க முடிகிறது.

நீர் ஆதாரத்தின் அவசியத்தை உணர்ந்து ராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றின் குறுக்கே 4 இடங்களில் ரூ.78 கோடியில் தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகின்றன. வைகை ஆற்றிலிருந்து முதுகுளத்தூர் செல்லும் பரளையாறு ரூ.23 கோடியில் பராமரிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற திட்டங்களுக்கு மழை அவசியம். அந்த மழையை பெறுவதற்கு நாம் அனைவரும் மரங்களை நட்டு பேணி பாதுகாக்க வேண்டும் என அவர் பேசினார். விழாவில் அதிமுக நிர்வாகிகள், சிவன்கோயில் அர்ச்சகர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். பார்த்திபனூர் நகர் செயலர் நாச்சியப்பன் நன்றி கூறினார்.

## மிளகாய் வத்தல் விலை ஏற்றம்: விவசாயிகள் மகிழ்ச்சி

**திருவாடானை:**திருவாடானை தாலுகா ஆர் எஸ் மங்கலத்தில் மிளகாய் வத்தல் சந்தையில் இந்தவாரம் கடந்த வாரத்தை குவிண்டாலுக்கு ரூபாய் 500 கூடுதலாக விற்றதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆர் எஸ் மங்கலம் பகுதியில் சுமார் 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் நெல் விவசாயத்திற்கு அடுத்தாற்போல் மிளகாய் விவசாயம் செய்யப்படுகிறது. இங்கு விளையும் மிளகாய் அதிக காரமாக இருப்பதால் வெளி மாவட்டங்களில் கிராக்கி இருக்கும்.ஆர் எஸ் மங்கலத்தில் வாரம் தோறும் சனிக்கிழமை மிளகாய் சந்தை நடப்பது வழக்கம். இங்கு வெளி மாவட்டங்களில் இருந்து மிளகாய் வியாபாரிகள் கலந்து கொண்டு வாங்கிச் செல்வது வழக்கம். கடந்த சில வாரமாக சந்தையில் மிளகாய் குவிண்டால் ரூபாய் 11ஆயிரத்து 200க்கு விற்றது. இந்த வாரம் சனிக்கிழமை சந்தையில் ரூபாய் 500 கூடுதலாகி ரூபாய் 11ஆயிரத்து 700க்கு விற்றது. இதனால் மிளகாய் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## ஆழ்துளைக் கிணறுகளில் தண்ணீர் விநியோகம் துவக்கம்

**கோவை:**கோவை மாநகராட்சியின் தெற்கு மண்டலத்தில் 3 இடங்களில் ரூ. 15 லட்சம் மதிப்பில் புதிய ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தண்ணீர் விநியோகத்தை நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி ஞாயிற்றுக்கிழமை துவக்கி வைத்தார்.

86-ஆவது வார்டு- அண்ணா நகர் பகுதியிலும், 87-ஆவது வார்டு- காந்தி நகர் பகுதியிலும், 88-ஆவது வார்டு- ஜெ.ஜெ.நகர் பகுதியிலும் தலா ரூ. 5 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து மக்கள் பயன்பாட்டிற்கான தண்ணீர் விநியோகம் துவக்கப்பட்டது.

மாநகராட்சி ஆணையர் க .லதா, துணை ஆணையர் சு.சிவராசு, தெற்கு மண்டலத் தலைவர் எம்.பெருமாள்சாமி, நகரமைப்பு குழுத் தலைவர் செந்தில்குமார், கல்விக் குழுத் தலைவர் சாந்தாமணி, கண்காணிப்பு பொறியாளர் க ணேஷ்வரன், வார்டு கவுன்சிலர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## விவசாயிகளின் நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

**பல்லடம்:** மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளின் நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கொமதேக மாநில பொதுச்செயலாளர் ஈஸ்வரன் சனிக்கிழமை தெரிவித்தார்.

பல்லடம் அருகேயுள்ள க .அய்யம்பாளையத்தில் விவசாய தியாகிகள் நினைவு

நாளையொட்டி, அங்குள்ள நினைவகத்தில் மலர் வளையம் வைத்து கொமதேக மாநில பொதுச்செயலாளர் ஈஸ்வரன் சனிக்கிழமை அஞ்சலி செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் அக்கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர் .

அதைத் தொடர்ந்து கரடிவாவி துணை மின்நிலையம் எதிரில் உள்ள திருமண மண்டபத்தில் கொமதேக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் கரைப்புதூர் ராஜேந்திரன் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் பங்கேற்ற அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஈஸ்வரன் கூறியது:

பல்லடம் சுற்றுவட்டாரப் பகுதியில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக விசைத்தறித் தொழில் அதிகமாக உள்ளது. விசைத்தறியாளர்கள் பயன்பெறும் வகையில் மத்திய அரசு, விசைத்தறிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் சூரியசக்தி மின் திட்டம் மூலம் தடையில்லா மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த அரசு மானியம் அளிக்க வேண்டும். அதே போல், உற்பத்தி தொழில்களை ஊக்கப்படுத்தி மக்களிடையே வாங்கும் சக்தியை உயர்த்துவதே உண்மையான பொருளாதார வளர்ச்சி ஆகும்.

விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில், விவசாயிகளின் நலன்களுக்கு மத்திய, மாநில அரசுகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். வரும் 2016-ஆம் ஆண்டில் நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலில், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, பாரதிய ஜனதாவுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்கும் என்றார்.

மாநிலத் தலைவர் சென்னியப்பன், இளைஞர் அணி மாநிலச் செயலாளர் இளம்பரிதி, மகளிர் அணிச் செயலாளர் விஜயலட்சுமி உள்பட பலர் பங்கேற்றனர்.

**சத்தியில் பால் கூட்டுறவு சங்கச் செயலாளர்கள் திறனாய்வுக் கூட்டம்**

**சத்தியமங்கலம்:**சத்தியமங்கலத்தில் பால் கூட்டுறவு சங்கச் செயலாளர்கள் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஆவின் முதுநிலை ஆய்வாளர் எம்.ஜி.கோவிந்தராஜ் தலைமை வகித்தார். கவுந்தப்பாடி ஜெயம் பிராணிகள் நல அறக்கட்டளை தலைவர் கே.வி.கோவிந்தராஜ் பேசுகையில், நாட்டில் உள்ள 120 கோடி மக்களில் 30 கோடி பேர் தினமும் உணவின்றி

தவிக்கின்றனர். அரை நூற்றாண்டு காலமாக நிலத்தில் போட்டப்பட்ட ரசாயன உரங்களால் மண் மாசடைந்துள்ளது. மாசுபட்ட மண்ணில் விளைந்த அரிசி, கோதுமை, பருப்பு போன்ற உணவுப் பொருகள்கள் விஷத்தன்மையுடன் காணப்படுகின்றன.

தற்போது, மக்களிடம் ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாக பசுவின் கழிவுகளில் இருந்து கம்போஸ்ட் உரம், மண் புழு உரம் மற்றும் அமிர்தச கரைச்சல் போன்ற இயற்கை இடுபொருள்களை பயன்படுத்தி விவசாயம் செய்து வருகின்றனர் என்றார்.

இதில் பால்வள துணைப் பதிவாளர் வி.சபாரத்தினம், முதுநிலை தணிக்கையாளர் பழனிசாமி, சத்தி வட்டார பால் சேகரத் தலைவர் க .மனோகரன், சத்தி, கோபி வட்டார பால் கூட்டறவு சங்கச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

**சுற்றுலா வளர்ச்சியில் வால்பாறை பின்னடைவு**

**வால்பாறை:**சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருப்பதால் வால்பாறைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாகக் குறைந்து வருகிறது.

ஏழாவது சொர்க்கம் என்று அழைக்கப்படும் வால்பாறையில் பல்வேறு சுற்றுலா இடங்கள் உள்ளன. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என பல அடி உயரத்திற்குக் காணப்படும் புல் நிறைந்த பகுதியான, இங்குள்ள அக்காமலை புல்மேடு (கிராஸ்ஹில்ஸ்) வேறெங்கும் காண முடியாத இயற்கைக் காட்சியாகும்.

இதேபோல வால்பாறை பகுதியில் பல்வேறு அருவிகள், காட்சிமுனைகள் உள்ளன. வால்பாறைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தடை செய்யப்பட்ட அக்காமலை புல்வெளி பகுதி தவிர அனைத்துப் பகுதிகளுக்கும் செல்கின்றனர். ஆனால் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், நுழைவுக் கட்டணத்தை முறையாகப் பெறும் வனத்துறையினர் அங்கு வளர்ச்சிப் பணிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் உள்ளனர்.

தமிழகத்தின் பிற மலைப்பிரதேசங்களில் படகு இல்லம், பூங்கா போன்ற எந்த ஒரு பொழுதுபோக்கு அம்சங்களும் இங்கு இல்லாமல் இருப்பது வால்பாறைக்கு ஒரு பின்னடைவு. படகு இல்லம் அமைக்க சுற்றுலாத் துறை சார்பில் வால்பாறை, ரொட்டிக்கடை பகுதியில் சுமார் 10 ஏக்கர் நிலம் தேர்வு செய்தனர். ஆனால் இந்த இடத்தை அரசு கையகப்படுத்த பலதரப்பில் எதிர்ப்பு கிளம்பியிருப்பதால் ஆமை வேகத்தில் இப்பணிக்கான நடவடிக்கைகள் இருப்பதாக தெரிகிறது. இதன் காரணமாக நாளுக்கு நாள் வால்பாறைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்து வருகிறது. இங்கு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் விரைவில்

மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## நீலகிரி பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.30 வழங்கக் கோரிக்கை

**உதகை:** நீலகிரி மாவட்டத்தின் பிரதான விவசாயப் பொருளான பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.30 வழங்க வேண்டும் என தென்னிந்திய விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திர மாநில விவசாயிகளை ஒருங்கிணைத்து உதகையில் உழவர் தினவிழா, கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் சனிக்கிழமை நடத்தப்பட்டது. இந் நிகழ்ச்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

நீலகிரி மாவட்டத்திலுள்ள பெரும்பான்மை மக்கள் தேயிலை விவசாயத்தையே நம்பியுள்ளனர். தேயிலை விவசாயம் தற்போது நலிவடைந்து வருவதால், இதைத் தடுத்து நிறுத்தவும், தேயிலை விவசாயத்தை மேம்படுத்தவும் தேயிலை வாரியம் பொறுப்புடன் செயல்பட வேண்டும். அத்துடன் பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.30 என நிர்ணயிக்க வேண்டும்.

மாவட்டத்திலுள்ள இன்ட்கோ தொழிற்சாலைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதோடு, தோட்டத்தொழிலாளர்களுக்கு தரமான சொந்த வீடும் கட்டித் தரப்பட வேண்டும். மலைப் பகுதியில் பட்டா கொடுக்க தடையாக இருக்கும் தடையாணை ரத்து செய்யப்பட வேண்டும். அதே போல, ஜல்லிக்கட்டு, ரேக்ளாவிற்கு உள்ள தடையாணைகளையும் நீக்க வேண்டும்.

ஆனைமலையாறு-நல்லாறு திட்டம், அத்திக்கடவு-அவிநாசி திட்டம், பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் ஆகியவை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

உச்சநீதிமன்ற உத்தரவு, காவிரி நதிநீர் ஆணையம், காவிரி நதிநீர் ஒழுங்குமுறை ஆணைய தீர்ப்புகளின்படி, தமிழகத்துக்கு 205 டி.எம்.சி. தண்ணீரை முறைப்படி கிடைக்க புதிதாக பொறுப்பேற்றுள்ள மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 134 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்த வேண்டுமென்ற பிரச்னையில் சட்டப் போராட்டம் நடத்தி தமிழகத்தின் உரிமைகளை

பாதுகாத்துவரும் முதல்வருக்கு இவ்வமைப்பு பாராட்டு தெரிவிக்கிறது.

கரும்புக்கு டன்னுக்கு ரூ.4,000மும், மரவள்ளிக்கு ரூ.5,000மும், வெங்காயத்திற்கு ரூ.3,000மும், மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.10,000மும், நெல்லுக்கு ரூ.2,000மும், பருத்திக்கு ரூ.5,000மும், சூரியகாந்திக்கு ரூ.5,000மும், நிலக்கடலைக்கு ரூ.5,000மும், எள்ளுக்கு ரூ.10,000மும், தேங்காய் கிலோவுக்கு ரூ.40ம், பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.30ம் கொடுத்து கொள்முதல் செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்து கிராமப்புற பள்ளிகளிலும், வேளாண் பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமித்து, பள்ளிகளுக்கு வேளாண்மை செய்ய இடம் ஒதுக்கித் தருவதோடு, வேளாண் கல்லூரிகளில் விவசாயத்தை தொழிலாக செய்ய விரும்புபவர்களுக்கு இடமளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் மத்திய,மாநில அரசுகள் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பருத்தி விதை வாங்கும் விவசாயிகள் கவனத்துக்கு...**

**வேலூர்:**பருத்தி விதைகளை விவசாயிகள் கூடுதல் விலைக்கு வாங்க நேரிட்டால் அதுகுறித்து உடனடியாக விதை ஆய்வுத் துணை இயக்குநருக்கு தகவல் தெரிவிக்கலாம்.

இதுகுறித்து விதை ஆய்வுத் துணை இயக்குநர் பி.ஜே.குணசேகர் செய்திக் குறிப்பு: திருப்பத்தூர், நாட்டறம்பள்ளி, கந்திலி மற்றும் ஆலங்காயம் வட்டாரங்களில் தற்போது பருத்தி விதைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகள் பருத்தி விதைகளை அரசு உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில் மட்டுமே வாங்க வேண்டும்.

விதைகளை வாங்கும்போது உரிய விவரங்களுடன் ரசீதை பெற்றுக் கொள்ள வேண்டும். பி.டி. பருத்தி விதை பாக்கெட்டின் மீது குறிக்கப்பட்டுள்ள அதிகபட்ச விற்பனை விலைக்கு மேல் கூடுதல் தொகை கொடுத்து விதைகளை வாங்க வேண்டாம்.

யாரேனும் அதிக விலைக்கு விற்பனை செய்வது, உரிய ரசீது அளிக்காமல் தவிர்ப்பது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டால் விதை ஆய்வுத் துணை இயக்குநர் அலுவலக தொலைபேசி எண்.0416-2264562-க்கு தகவல் தெரிவிக்கலாம்.

## ஆலங்காயம் ஒன்றியத்தில் வேளாண் இணை இயக்குநர் ஆய்வு

**வாணியம்பாடி:**ஆலங்காயம் ஒன்றியப் பகுதிகளில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டப் பணிகளை வேலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ரா.ஜெயசுந்தர் சனிக்கிழமை நேரில் ஆய்வு செய்தார் .

ஆலங்காயம் கோமூட்டேரி, நிம்மியம்படம் மற்றும் முல்லைப் பகுதிகளில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள துவரை நடவு முறை, எண்ணெய்ப் பனை சாகுபடி மற்றும் திருந்திய கரும்பு சாகுபடி திட்டம் நடைபெறும் பகுதிகளில் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது விவசாயிகளுக்கு பயிறு வகை பயிர்களின் முக்கியத்துவத்தையும், நவீன தொழில்நுட்பங்களையும், அதற்காக வேளாண்மைத் துறையின் மூலம் வழங்கும் மானிய விவரங்களையும் எடுத்துக் கூறினார்.

மேலும் பாமாயில் மரம் என்றழைக்கப்படும் எண்ணெய் பனையின் முக்கியத்துவத்தையும் ஆண்டு முழுவதும் கிடைக்கும் நிரந்தர வருவாய் விவரங்கள், இதனை வளர்க்க வேளாண் துறை வழங்கும் சலுகைகள், திருந்திய கரும்பு சாகுபடியில் சொட்டு நீர்ப் பாசனத்தின் அவசியம் குறித்தும் எடுத்துக் கூறினார். ஆய்வின்போது ஆலங்காயம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.காந்தி, மாவட்ட விவசாய சங்கச் செயலாளர் தனபால், வேளாண்மை அலுவலர் ஜீவானந்தன், உதவி விதை அலுவலர் சேகர், உதவி வேளாண்மை அலுவலர்கள் பழனி, கிருபாகரன், சீனிவாசன் மற்றும் விவசாயிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## திருச்செங்கோடு விற்பனைச் சங்கத்தில் ரூ. 1.20 கோடிக்கு மஞ்சள் விற்பனை

**திருச்செங்கோடு:** திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 1.20 கோடிக்கு மஞ்சள் விற்பனையானது.

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து 2,500 மூட்டை மஞ்சளை விவசாயிகள் விற்பனைக்கு சனிக்கிழமை கொண்டு வந்திருந்தனர்.

இந்த மஞ்சளைக் கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய பகுதிகளிலிருந்து 35-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர்.

இதில், விரலி ரகம் ஒரு குவிண்டால் ரூ. 6,739 முதல் ரூ. 7,605 வரையும், கிழங்கு ரூ. 5,993 முதல் ரூ. 6,249 வரையும், பனங்காளி ரூ. 9,699 முதல் ரூ.13,999 வரையும் சேர்ந்து மொத்தம் 2,500 மூட்டை மஞ்சள் ரூ.1.20 கோடிக்கு ஏ லம்போனது. விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இந்தத் தகவலை கூட்டுறவுச் சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார். விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## கோழி இறைச்சிக் கடைகளுக்கு எச்சரிக்கை நோட்டீஸ்

**போச்சம்பள்ளி:** மத்தூரில் சுகாதாரத்தை பராமரிக்காத 5 கோழி இறைச்சிக் கடைகளுக்கு சனிக்கிழமை எச்சரிக்கை நோட்டீஸ் அளிக்கப்பட்டது.

மத்தூரில் உள்ள கோழி இறைச்சிக் கடைகளில் வட்டார மருத்துவர் அலுவலர் எஸ்.பி.ராஜ்குமார் தலைமையில் சனிக்கிழமை ஆய்வு நடத்தப்பட்டது. அப்போது, 5 கோழிக் கடைகள் சரிவர சுகாதாரத்தைப் பராமரிக்காதது தெரிய வந்தது. இதையடுத்து அந்தக் கடைகளுக்கு எச்சரிக்கை நோட்டீஸ் அளிக்கப்பட்டது.

இந்த ஆய்வில் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் டி.ஏகாம்பரம், சுகாதார ஆய்வாளர்கள் எம்.மாதையன், எ .தமிழ்மாறன், ஆர்.ரமேஷ்குமார், சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

குடைமிளகாய், வாழை சாகுபடி இலவச பயிற்சி
கிருஷ்ணகிரி:

கிருஷ்ணகிரியை அடுத்த எலுமிச்சங்கிரி கிராமத்தில் பசுமைக் குடிலில் குடைமிளகாய், வாழையில் அதிக மகசூல் பெற உகந்த தொழில்நுட்பங்கள் குறித்து இலவச பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இதுகுறித்து எலுமிச்சங்கிரி கிராமத்தில் உள்ள டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல்

மையத்தின் சார்பில் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

எலுமிச்சங்கிரி கிராமத்தில் வருகிற 8-ஆம் தேதி பசுமைக் குடிலில் குடைமிளகாய் சாகுபடி முறை குறித்தும், வரும் 15-ஆம் தேதி வாழையில் அதிக மகசூல் பெற உகந்த தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்குத் தனித் தனியே ஒருநாள் பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

இந்தப் பயிற்சியில் பங்கேற்க விருப்பம் உள்ள விவசாயிகள் 9659557716, 8903289738 ஆகிய கைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இலவச பயிற்சிக்கு வருவோர் தங்களது சொந்த செலவில் வர வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தூர்வாரும் பணிகள் நிறைவு: செயற்பொறியாளர் ஆய்வு
நீடாமங்கலம்:

நீடாமங்கலம் பகுதிகளில் வெண்ணாறு, வெட்டாறு, கோரையாறு பிரிவு வாயக்கால்களில் முடிக்கப்பட்ட தூர்வாரும் பணிகளை வெண்ணாறு வடிநிலக் கோட்ட தஞ்சாவூர் செயற்பொறியாளர் ஆர். குணசேகரன் சனிக்கிழமை ஆய்வு செய்தார்.

வெண்ணாறு பிரிவு மாணிக்கமங்கலம் வாயக்கால், வெட்டாறு பிரிவு சாந்தன்வாரி துணை வாய்க்கால் மற்றும் கோரையாறு பிரிவு ரிஷியூர், நாரணமங்கலம் வாயக்கால்களில் முடிக்கப்பட்ட தூர்வாரும் பணிகளை ஆய்வு செய்ததுடன் வெண்ணாறு வடிநிலக் கோட்டம் தஞ்சாவூர் சார்ந்த வெண்ணாறு வடிநில உபகோட்டம் நீடாமங்கலம் சரக ஆறுகள், வாயக்கால்களில் பழுதடைந்துள்ள கட்டுமானங்களின் சிறப்பு மராமத்து பணியை உடன் தொடங்க அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார். ஆய்வின்போது வெண்ணாறு வடிநில உபக்கோட்ட உதவி செயற்பொறியாளர் குணசேகரன், உதவிப் பொறியாளர்கள் கனகரத்தினம், தியாகேசன், தனராமன் ஆகியோர் உடனிருந்தனர்.

**வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு பயிற்சி**

**நீடாமங்கலம்:** திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு மாணவிகளுக்கு மன்னார்குடி உழவர் சந்தையில் அண்மையில் பயிற்சியளிக்கப்பட்டது.

உழவர் சந்தையின் நோக்கம், உழவர் சந்தையால் விவசாயிகளுக்கு விளையும் நன்மைகள் மற்றும் விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருள்களை உழவர் சந்தையில் விற்க அதிகாரிகளை எவ்வாறு அணுக வேண்டும். விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்படுகிறது என்பது குறித்து வேளாண் அலுவலர் செண்பகம் மாணவிகளுக்கு விளக்கினார். மாணவிகள் உழவர் சந்தையில் இருந்த விவசாயிகளிடமும், நுகர்வோரிடமும் கருத்துகளையும், அனுபவங்களையும் கேட்டறிந்தனர்.

இத் தகவலை நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்

க . சோழன் தெரிவித்துள்ளார்.

## மீன்களை பதப்படுத்த தூய்மையான ஐஸ் கட்டிகளை பயன்படுத்த அறிவுறுத்தல்

**நாகப்பட்டினம்:**அறுவடை செய்யப்படும் மீன்களை உரிய முறையில் பதப்படுத்தி, பாதுகாக்க தூய்மையான ஐஸ் கட்டிகளை பயன்படுத்த வேண்டும் என நாகை மீன்வளப் பல்கலைக்கழகத்தின் மீன்வளத் தொழில்நுட்ப நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மீன்வளப் பல்கலைக்கழக இயக்குநர் மு. நாகூர் மீரான், உதவிப் பேராசிரியர் பா. கணேசன் ஆகியோர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாகை மாவட்டத்தில் ஆண்டுதோறும் சுமார் 7 ஆயிரம் டன் மீன் அறுவடை செய்யப்படுகிறது. மாவட்டத்தில் 2-வது முக்கிய தொழிலாக மீன்பிடித் தொழில் உள்ளது. ஐஸ் கட்டியில் வைக்கப்பட்ட மீன்கள், கெட்டுப் போனவை என்ற தவறான கருத்து மக்களிடம் நிலவி வருகிறது. மீன்கள் கெடுவதற்கு நுண்மங்கள் (கிருமிகள்), நொதிகள் முக்கிய காரணங்களாகும். இவற்றிலிருந்து மீன்களைப் பாதுகாக்க ஐஸ் கட்டிகளைக் கொண்டு மீன்களை பதப்படுத்துவது அவசியம். இதனால், மீன்களின் வெப்ப நிலை குறைக்கப்பட்டு, கெட்டுப் போகாமல் பாதுகாக்க முடியும். மீன்களின் எடைக்கு நிகரான எடையில் ஐஸ் கட்டிகளைக் கொண்டு குளிர்விக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் புதிய ஐஸ் கட்டிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதன்மூலம் மீன்களை 7 நாள்கள் வரை கெடாமல் பாதுகாக்க முடியும்.

தூய்மையான, குடிப்பதற்கு உகந்த நிலையில் உள்ள நீரைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஐஸ் கட்டிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மேலும், அந்த நீரில் உரிய அளவில் குளோரின் கலக்கப்பட்டிருக்க வேண்டும். ஐஸ் கட்டிகளைக் கொண்டுச் செல்லும் கலன்களும் குளோரின் கலந்த தண்ணீரால் கழுவப்பட்டிருக்க வேண்டும். உரிய அளவில், தூய்மையான ஐஸ் கட்டிகளைப் பயன்படுத்தி மீன்களைப் பதப்படுத்துவதால், இழப்பை தவிர்க்க முடியும் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி

**கருங்கல்:**கருங்கல் அருகே உள்ள குறும்பனை கிராமத்தில் புனித இக்னிஷியஸ் மேல்நிலைப் பள்ளி சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

பேரணிக்கு பள்ளித் தாளாளர் ஸ்டீபன் தலைமை வகித்தார். சகாயசெல்வம், தலைமை ஆசிரியர் கலஸ்டின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளி வளாகத்தில் இருந்து தொடங்கிய பேரணி பாத்திமா, தோமையார், அந்தோனியார், மரியம்மாள், சகாயமாதா, சூசைப்பர், சிலுவையார் உள்ளிட்ட தெருக்கள் வழியாகச் சென்று பள்ளி வளாகத்தில் நிறைவடைந்தது. இதில் என்.எஸ்.எஸ். திட்ட அலுவலர் ஜோசப், அருள்சகோதரி மேரி, உடற்கல்வி ஆசிரியர்கள் ஜெரால்டு, ஆரோக்கிய அனிஷா மற்றும் ஆசிரியர்கள் அலுவலகப் பணியாளர்கள் மாணவர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## 7 தீவனக் கிடங்குகளுக்கு வைக்கோல் விநியோகிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

**திருநெல்வேலி:**திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அரசின் 7 தீவனக் கிடங்குகளுக்கு வைக்கோல் விநியோகம் செய்ய, விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதுதொடர்பாக, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் வெளியிட்டுள்ள செய்தி:

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போருக்கு அரசின் மானிய விலையில் வைக்கோல் விநியோகம் செய்வதற்காக மானூர், மேலநீலிதநல்லூர், குருவிகுளம், ராதாபுரம் ஆகிய 4 இடங்களில் உள்ள அரசு கால்நடை மருந்தகங்களில் தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, பாவூர்சத்திரம், கடையநல்லூர், நான்குனேரி ஆகிய கால்நடை மருந்தகங்களிலும் கூடுதலாக 3 தீவனக் கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கிடங்குகளில் தரமான உலர்ந்த வைக்கோல் கொள்முதல் செய்து 21 கிலோ கட்டுகளாகக் கட்டி, வைக்கோல் போர் அமைத்து வாரம் 15 டன் வீதம் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு வழங்க விருப்பம் உள்ள விவசாயிகள், ஒரு கிலோ வைக்கோல் விலையை குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட விலைப்புள்ளிகளை வழங்கலாம்.

வரும் 10ஆம் தேதி மாலை 5 மணி வரை விலைப்புள்ளிகளை வழங்கலாம். வழங்கல் ஆணை பெற்ற விவசாயிகள் 3 நாள்களுக்குள் விநியோகத்தைத் தொடங்க வேண்டும்.

இந்த விலைப்புள்ளி விண்ணப்பங்களை ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ, பதிவு அஞ்சல் மூலமோ அளிக்க வேண்டும்.

பெறப்படும் விலைப்புள்ளிகள் அனைத்தும் வரும் 11 ஆம் தேதி மாலை 4 மணிக்கு மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் திறக்கப்பட்டு குறைந்த விலைப்புள்ளி குறிப்பிட்ட விவசாயிகளுக்கு ஆணை வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு திருநெல்வேலியில் 0462- 2500489, 2340715, 2541454 என்ற தொலைபேசி எண்களிலும், அம்பாசமுத்திரத்தில் 04634- 260070, தென்காசியில் 04633-227744 என்ற தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நீரின்றி கருகும் நெற்பயிர் மாட்டு தீவனமாகும் அவலம்</u>**

**காஞ்சிபுரம்:** தென்மேற்கு பருவ மழையை நம்பி, நடவு செய்த நெற்பயிர் கருகி, மாடுகளுக்கு தீவனமாகும் அவல  நிலை உருவாகி உள்ளது.
காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை சரிவர பெய்யவில்லை.

இதனால் நிலத்தடி நீரும் குறைந்து விட்டது. காஞ்சிபுரம் மாவட்டத்தின் நீர் ஆதாரமாக விளங்கும், பாலாற்றில் களிமண் தெரியும் அளவுக்கு மணல் சுரண்டப்பட்டு, விளை நிலம்போல் ஆகி விட்டது.

இந்நிலையில், இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை பொழியும் என்ற நம்பிக்கையில் காஞ்சிபுரம் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகள் நெற்பயிரை நடவு செய்திருந்தனர். இதுவரை போதிய மழை பெய்யாததாலும், நிலத்தடி நீர்மட்டமும் வர வர குறைந்து கொண்டு வருவதாலும் பயிருக்கு தேவையான தண்ணீரை பாய்ச்ச இயலாத நிலை உருவாகி வருகிறது. இதனால், விவசாயிகள் விரக்தியின் எல்லைக்கே சென்று விட்டனர். அடுத்து, பிச்சுவாடி பகுதியில் மழையை நம்பி நெற்பயிர் நடவு செய்த விவசாயிகள், நீரின்றி கரும் நெற்பயிரை காண சகிக்க முடியாமல், வருந்தி வருகின்றனர். ஒரு அடி உயரம் வரை வளர்ந்த நெற்பயிர் மொத்தமும் கருகிவிட்டன. இதுகுறித்து, அப்பகுதி விவசாயிகள் கூறுகையில், 'கடந்த ஆண்டு ஆழ்துளை கிணற்று தண்ணீரை நம்பி, கொஞ்சம் விவசாயம் செய்தோம். இந்த ஆண்டு அதுவும் வறண்டு விட்டது. மழை பொழியும் என்ற நம்பிக்கையில் பயிர் வைத்தோம். தேவைப்பட்ட நேரத்தில் மழை பொழியாததால் நெற்பயிர்கள் கருகிவிட்டன. உரிய இழப்பீடு தர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

<u>**முருங்கை விலை உச்சம்; விவசாயிகள் மகிழ்ச்சி**</u>

**வெள்ளகோவில்:** வெள்ளகோவில் வாரச்சந்தையில் பிரதி வாரம் ஞாயிற்றுக்கிழமைகளில், வாரச்சந்தை நடக்கிறது. இதில், விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைவிக்க கூடிய விளை பொருட்களை, சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். சந்தைப்பகுதியில் மேல்புறம், மொத்த காய்கறிகள் வியாபாரிகள் மற்றும் முருங்கை வாங்கும் வியாபாரிகள் குவிகின்றனர். காலை, ஆறு முதல், இந்த வியாபாரம் களை கட்டும். காலை, எட்டு மணிக்கு மேல், மொத்த வியாபாரிகளிடம் இருந்து முருங்கை மற்றும் அனைத்து காய்கறிகளையும் பெற்று, வெளியூரை சேர்ந்த சிறு வியாபாரிகள், வாரச்சந்தைக்கு சுங்கம் கட்டி எடுத்து செல்கின்றனர். நேற்று காலை, வாரச்சந்தையில் முருங்கை காய் விலை, 25 காய் கொண்ட ஒரு கட்டு, செடிமுருங்கை, 90 முதல், 100 ரூபாய் வரையும், மரமுருங்கை, 75 முதல், 80 ரூபாய் வரையும் விற்றது. 600 காய் கொண்ட ஒரு மூட்டையின் விலை, ம ரமுருங்கை, 1,300 முதல், 1,500 ரூபாய் வரையும், செடிமுருங்கை, 1,800 முதல், 2,000 ரூபாய் வரை விற்றது.காலை

நேரத்தில், மூட்டைக்கு, 2,000க்கு முருங்கை விற்றது. மீண்டும் விலை குறைந்ததால், விவசாயிகள் காலை நேரத்தில் கொண்டு வந்திருந்தால், அதிக விலைக்கு விற்றிருக்கலாம், என கூறி சென்றனர். இதனால், முருங்கை விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். முருங்கை மரம், தற்போது பூ விட்டிருப்பதால், இனிமேல்தான் அதிகமாக முருங்கை வரத்து இருக்கும். தற்போது முருங்கை வரத்து குறைந்து, விலை அதிகமாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ந்தனர். கோவை, சின்னதாராபுரம் வியாபாரிகள் அதிகமாக முருங்கைக்காய் வாங்கி, பெங்களுரு, கேரளா, சென்னை போன்ற ஊர்களுக்கு, அனுப்பி வைத்தனர்.

## மஞ்சள் நடவு செய்ய முடிவு; ஊஞ்சலூரில் விவசாய பணிகள் தீவிரம்

**ஈரோடு:** மஞ்சளை நடவு செய்ய முடிவு செய்த விவசாயிகள், தங்கள் நிலங்களை தயார் செய்யும் பணியில், தீவிரம் காட்டி வருகின்றனர். இந்தாண்டு துவக்கம் முதல் போதிய மழை பொழிவற்ற வறண்ட வானிலையே, மாவட்டத்தில் காணப்படுகிறது. கான்கிரீட் பணியால், வழக்கத்துக்கு மாறாக ஜனவரியிலேயே, காலிங்கராயன் வாய்க்கால் நீர் நிறுத்தப்பட்டு விட்டது. அதன் பின் மீண்டும் வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படவில்லை. ஜூன் இரண்டாவது வாரத்தில் வாய்க்காலில் தண்ணீர் திறந்து இருக்க வேண்டும்.ஆனால், கான்கிரீட் பணி காரணமாக, ஜூலை முதல் வாரத்துக்கு மேல் தண்ணீர் திறக்கப்பட கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஊஞ்சலூரில் காவிரி ஆற்றை ஒட்டியுள்ள பகுதிகளில் மட்டும் வாழை, மஞ்சள், நெல் உள்ளிட்ட பண பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆற்று நீர் மட்டுமின்றி போர்வெல், கிணற்று நீரை பயன்படுத்தி பயன் பெறுகின்றனர். காலிங்கராயன் வாய்க்கால் பாசன பகுதியில் நிலத்தடி நீரும் காய்ந்து போனதால் விவசாயிகளுக்கு ஏ மாற்றமே மிஞ்சியது. தற்போது, பத்து நாட்களுக்குள், காலிங்கராயனில் தண்ணீர் திறக்கப்பட கூடும், என்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. பவானிசாகர் அணையில் இருப்பு வைக்கப்பட்டுள்ள நீர் அளவு, திருப்திகரமாகவே உள்ளது.எனவே, விரைவில் நீர் திறந்து விடப்படக்கூடும் என்று, விவசாயிகள் நம்புகின்றனர். பொதுப்பணித்துறை அதிகாரிகளும், தண்ணீரை திறந்து விடலாம், என்று அரசுக்கு பரிந்துரையை அனுப்பி உள்ளனர்.இதனால், ஊஞ்சலூர், கொளாநல்லி, கொடுமுடி பகுதியை சேர்ந்த விவசாயிகள், தங்கள் விளை நிலங்களை தயார்படுத்தும் பணியில், தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தேவையான விதை மஞ்சளை வாங்கி சேகரித்துள்ளனர். இதுகுறித்து, ஊஞ்சலூரை சேர்ந்த பாலகிருஷ்ணன் கூறியதாவது: இப்பகுதியில் வழக்கமாக பி.டி.சி., ரக

மஞ்சளே, அதிகளவில் நடவு செய்யப்படும். பத்து மாத பயிரான மஞ்சள், வழக்கம் போல், இந்தாண்டும் பயிரிட, இப்பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பிலான விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். காலிங்கராயன் வாய்க்காலில் பாசனத்துக்காக விரைவில், தண்ணீர் திறந்து விடப்படும், என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக விவசாயிகள், கூலி தொழிலாளர்களை கொண்டு விவசாய விளை நிலங்களை தயார்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். நீர் திறப்பு உறுதியாகி இருப்பதால், சில விவசாயிகள் மஞ்சள் விதைகளை நடவு செய்ய துவங்கி உள்ளனர். மஞ்சள், பத்து மாத பயிராகும். வழக்கமாக காலிங்கராயனில் தண்ணீர் திறந்து விடப்பட்ட, ஒரு வாரத்துக்குள் மழை பெய்ய துவங்கி விடும். எனவே நீரோட்டம், நிலத்தடி நீர்மட்டம் மெல்ல உயர துவங்கும். இதனால், மஞ்சள் செழிப்பாக வளரும் என்பதில் சந்தேகமில்லை. கொடுமுடி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில், மஞ்சள் பயிரே பிரதானம். பொதுவாகவே, கொடுமுடி மஞ்சளுக்கு தான் மவுசு அதிகம். விவசாயிகள் விலையை எதிர்பார்த்து மட்டுமின்றி, மழையை எதிர்நோக்கி மஞ்சளை பயிரிடுகின்றனர். இதனால், பெரும்பாலான விவசாய விளைநிலங்கள் தயார் நிலையில் உள்ளன, என்றார்.

**<u>விளைச்சல் குறைவு எதிரொலியால் காய்கறி விலை கிடு கிடு உயர்வு</u>**

**ப .வேலூர்:** மழை இல்லாததாலும், விளைச்சல் குறைந்ததாலும், காய்கறிகளின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. ப .வேலூர் டவுன் பஞ்சாயத்தில், காமராஜர் வாரச்சந்தை அமைந்துள்ளது. இங்கு, வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை சந்தை கூடுகிறது. வாரச்சந்தையில், பொத்தனூர், பாண்டமங்கலம், பரமத்தி, நன்செய் இடையாறு, எஸ்.வாழவந்தி, பாலப்பட்டி உள்பட சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், நாமக்கல், கரூர் மாவட்டத்தை சேர்ந்த வியாபாரிகள் காய்கறி, கீரை வகைகள், பழங்கள் விற்பனை செய்கின்றனர்.ப .வேலூர் மற்றும் பல்வேறு பகுதிகளை சேர்ந்த கிராம மக்கள் காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர். போதிய தண்ணீர் இல்லாததால், காய்கறிகள் உற்பத்தி குறைந்துள்ளது. அதனால், சந்தையில் அவற்றின் விலை அதிகரித்துள்ளது.நேற்று நடந்த சந்தையில் அனைத்து காய்கறிகளின் விலையும் கிடுகிடுவென உயர்ந்ததால், பொதுமக்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். தக்காளி கிலோ, 30, கத்தரிக்காய், 60, உருளை கிழங்கு, 30, வெண்டை, 40, பீர்க்கங்காய், 60, பச்சை மிளகாய், 50, முள்ளங்கி, 40, பீட்ரூட், 40, கேரட், 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.மேலும், பீன்ஸ், 80, முட்டைகோஸ், 30, புடலை மற்றும் பாவற்காய், தலா, 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்த விலை உயர்வு காரணமாக, சந்தையில்

மக்கள் வருகையும் குறைந்தது.    இது குறித்து வியாபாரி முருகேசன் கூறியதாவது:பொதுமக்கள் தங்கள் தேவைக்கு ஒரு கிலோ என்ற அளவில் காய்கறிகளை வாங்கி வந்தனர். தற்போது விலை அதிகரித்ததால், அரை, கால் கிலோவாக குறைத்துள்ளனர். விற்பனை குறைந்ததால், எங்களுக்கு லாபமும் குறைகிறது. போட்ட முதலை எடுக்க முடியுமா என்பதே சந்தேகமாக உள்ளது. மழை இல்லாததால், விளைச்சல் குறைந்துள்ளது. அதனால், விலை உயர்வை தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியது.இவ்வாறு அவர் கூறினார்.

## நபார்டு முதன்மை பொது மேலாளர் தகவல்; "விரிவுபடுத்தப்படும் முன்மாதிரி திட்டம்'

**கரூர்:** ""கரூர் மாவட்டத்தில், நபார்டு உதவியுடன் உழவர் மன்றங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பல்வேறு முன்மாதிரி திட்ட பயிற்சிகள் மூலம், விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து, அவற்றை பின்பற்றிவருகின்றனர். இத்திட்டங்கள், இதர    மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்,'' என  புழுதேரியில் நடந்த முகாமில், தமிழ்நாடு நபார்டு முதன்மை பொது மேலாளர் தெரிவித்தார்.    கரூர் மாவட்டம், புழுதேரியில் சரஸ்வதி வேளாண் அறிவியல் மையம் மூலம் செயல்படுத்தப்பட்ட நபார்டு திட்டங்கள் பற்றிய மதிப்பாய்வு நடந்தது. சரஸ்வதி வேளாண் அறிவியல் மையத்தில் நடந்த முகாமிற்கு, மையத்தின் அறங்காவலர் வேலு தலைமை வகித்தார்.உழவர் மன்றத்தினருக்கு அளிக்கப்பட்ட பைலட் திட்டமான செம்மைநெல் சாகுபடி, அடர் நடவு வாழை, அடர் தீவனம், ஒற்றை நெல் சாகுபடி, போன்ற பயிற்சிகள், பண்ணை விளக்கத்திடல்கள், நீர் மேலாண்மை, புதிய தொழில் நுட்ப பயிற்சி போன்றவை குறித்து மையத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரவியம் விரிவாக எடுத்துரைத்தார்.பயிற்சி பெற்ற உழவர் மன்றங்களைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் செல்லமுத்து, ராஜேஸ்வரி, மதியழகன் உட்பட பலர் செம்மைநெல் சாகுபடி, அடர் நடவு வாழை, அடர் தீவனம் சாகுபடி, ஆகிய திட்டங்களின் மூலம் பெற்ற பயன்களை சான்றுகளுடன் எடுத்துரைத்தனர். தீவன மேலாண்மையில் ஆடு, மாடுகளுக்கு உரிய தீவனங்கள் கோ-4, கோ-29, மக்காசோளம் ஆகியவை அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு பயன்பெற்றுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.    முகாமில், தமிழ்நாடு நபார்டு முதன்மை பொது மேலாளர் வெங்கடேஸ்வரராவ் பங்கேற்று பேசியதாவது: நபார்டு அளித்துள்ள திட்டங்களை சரஸ்வதி வேளாண் அறிவியல் மையம் நன்கு செயல்படுத்தி உள்ளதன் மூலம் உழவர் மன்றங்கள் பயன்பெற்றுள்ளது. இம்மாதிரி தொழில் நுட்பங்களை, அனைத்து

விவாசயிகளும் பயன்பெறும் வகையில், உழவர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.பைலட் திட்டங்களை, இதர பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி, நபார்டு செயல்படுத்த உள்ளது. சரஸ்வதி வேளாண் அறிவியல் மையம் மூலம் வேளாண் உற்பத்தி பயிற்சி மற்றும் கருத்தரங்குகள, போன்ற உயர் தொழில் நுட்ப பயிற்சிகளை உழவர் மன்றத்தினர் மற்றும் விவசாயிகளுக்கு அளிக்க, நபார்டு உதவி புரியும்."சிநேகிதி' போன்ற தொண்டு நிறுவனங்கள் நபார்டு திட்டத்தில், மகளிர் சுய உதவி குழுவினர்க்கு ஒருநாள் விழிப்புணர்வு பயிற்சிகள், தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சிகள் போன்றவற்றை அளித்து வருகின்றன.மேலும், உழவர் மன்றங்களை அமைத்து, அவர்களுக்கு உரிய பயிற்சிகளை ந பார்டு உதவியுடன் அளித்து வருகின்றனர். இது போன்ற திட்டங்களுக்கு உரிய வாய்ப்புகளை நபார்டு அளிக்கும்.இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து, உழவர் மன்றத்தினருடன் தமிழ்நாடு நபார்டு முதன்மை பொது மேலாளர் கலந்துரையாடினார். சரஸ்வதி வேளாண் அறிவியல் மையத்தில் செயல்படும் ப ல்வேறு வேளாண் துறைச்சார்ந்த திட்டங்கள் மற்றும் பண்ணையை நேரில் ஆய்வு செய்தார்.முகாமில், நபார்டு உதவி பொது மேலாளர்கள் கரூர் பார்த்திபன், திருச்சி சுரேஷ்குமார், மையத்தின் ஆலோசகர் லட்சுமணன், சிநேகிதி நிறுவனத்தினர், இயற்கை மகளிர் உழவர் மன்ற கூட்டமைப்பினர் மற்றும் பல்வேறு உழவர் மன்றங்களை சேர்ந்த நிர்வாகிகள், முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர். வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுனர் தமிழ்ச்செல்வி நன்றி கூறினார்.

**வேளாண் கூட்டுறவு சங்கத்தில் ரூ. 49 லட்சம் மஞ்சள் ஏலம்**

**ஆத்தூர்:** ஆத்தூர், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த ஏலத்தில், 1,371 மூட்டை மஞ்சள், 49.76 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. சேலம் மாவட்டம், ஆத்தூர், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த, 300 விவசாயிகள் விளைவித்த 1,371 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.இதில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் 5,019 ரூபாய், அதிகபட்சம் 7, 509 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் 4,509 ரூபாய், அதிகபட்சம் 6, 559 ரூபாய், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் 9,009 ரூபாய், அதிகபட்சம் 15,612 ரூபாய்க்கு விற்பனையானது.ஏலத்தில், 15 வியாபாரிகள் கலந்து கொண்டு, 1,371 மூட்டை மஞ்சளை, 49.76 லட்சம் ரூபாய்க்கு வாங்கிச் சென்றனர்.

**மரக்கன்று நடும் விழா துவக்கம்**

**சேலம்:** ஆலயம் அறக்கட்டளை சார்பில், 300 மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது. தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி கிராம பகுதியில், கடந்த, 3ம் தேதி, ஆலயம் அறக்கட்டளை பொது நல  தொண்டு நிறுவனம், இந்திய வள  அமைப்பகம் கோயம்புத்தூர் இணைந்து, 300க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நடும் விழா நடந்தது.ஸ்ரீ அறக்கட்டளை தலைவர் தமிழ்செல்வம், இந்திய வள  அமைப்பகத்தின் தலைமை இயக்குனர் மணி, கருக்கல்வாடி ஊராட்சி மன்ற தலைவர் வசந்தி பழனிசாமி, கிராம நிர்வாக அலுவலர் மணி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.விழாவில், மரம் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள், மரங்களை பாதுகாக்கும் முறைபற்றியும், பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது. ஆலயம் அறக்கட்டளை சார்பில் இரும்பாலை, மாரமங்கலத்துப்பட்டி, பூலாவரி, பாரப்பட்டி பகுதிகளில், 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணி துவங்க உள்ளதாக, அறக்கட்டளை தலைவர் தமிழ்செல்வன் தெரிவித்தார்.

மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

நங்கவள்ளி: தாரமங்கலம் யூனியன், பாப்பம்பாடி பஞ்சாயத்து சார்பில், மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி நடந்தது.  மத்திய அரசின் ஊரக  வேலை வாய்ப்பு திட்டத்தில் பணியாற்றும், பெண் பணியாளர்கள் பேரணியில் கலந்து கொண்டனர்.தாரமங்கலம் யூனியன் சேர்மன் ஏழுமலை, பி.டி.ஓ .,ராமச்சந்திரன், பாப்பம்பாடி பஞ்சாயத்துத் தலைவர் ரஞ்சித் உள்பட பலர் பங்கேற்றனர்.